3. ஒத்திவைப்புத் தீர்மானம்

கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூரில் நிலவரி வசூலுக்குச் சென்ற அதிகாரிகளின் அத்துமீறிய நடவடிக்கை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 42-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன் :

"கோவை ஜில்லா, வேட்டைக்காரன்புதூர் வி. வி. தங்கவேல் கவுண்டரிடம் நில வருமானவரிப் பாக்கி வசூலிப்பதற்காகச் சென்றவிடத்தில் நில வருமான அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் அத்துமீறி நடந்து கொண்டதைப் பற்றி விவாதிக்கப் பேரவையை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்."

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் உட்காருங்கள். தீர்மான வாசகத்திற்குப் பிறகு உறுப்பினர் கூறிய வார்த்தைகள் பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பத்திரிகைகளிலும் வெளிவரா.

போலீசாருடைய அத்துமீறிய செயல்களைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் வேலைகளைத் தள்ளி வைக்கக் கூடாது என்று மீண்டும், மீண்டும் தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, போலீசாரின் செயல்கள் அத்து மீறியவைகளாக இருந்தாலும் பேரவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்று தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் ஒரு தீர்மானம் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கொடுப்பதாக இருந்தால் முதலிலேயே என்னுடைய அலுவல் அறையில், கொடுத்து அனுமதிவாங்கியிருக்கவேண்டும்.

DR. H. V. HANDE: Sir, on a point of order.

MR. SPEAKER: No point of order can be raised when the Speaker is on his legs. நான் உட்கார்ந்த பிறகுதான் நடைமுறைக் கேள்வியை எழுப்பமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் 82-வது விதியின்படி அறிக்கை ஒன்றைப் பேரவையின் முன் வைப்பார்கள்.

DR. H. V. HANDE : Sir, to-day is the last day of the session. The Hon. Speaker did not allow the hon. member, Thiru Krishnaswami Gounder to speak on the adjournment motion. The adjournment motion relates to a very serious matter and I request the Hon. Minister for Home or Food to give us some explanation. That is why I wanted to raise a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் படித்தவர்கள். நன்றாகப் பேரவையின் விதிகளைத் தெரிந்தவர்கள்.

DR. H. V. HANDE : To-day is the last day of the session. I presume the Hon. Minister for Food is prepared to give a statement.

THE HON. THIRU C. N. ANNADURAI : Though the issue cannot become a necessary reason for the adjourment of the House, I assure the Hon. Member who has raised the issue to come and discuss it with me and the needful will be done.

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பட்டது.